பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அமைப்பதாக உள்ளது. அதுபோது காஞ்சி மாநகரத்தில் இவ்வித விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

Supply of Milk to Starred Hotels in Madras City

*Q. No.85–THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether the Tamil Nadu Milk Producers Co-operative Federation is supplying Milk for the starred hotels at Madras City;

(b) the quantum of milk being supplied per day; and

(c) the price of the milk?

மாணபுமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) அவற்றிற்கு ஒரு நாளில் 280 லிட்டர் பால் வழங்கப்படுகிறது.

(இ) ஒரு லிட்டருக்கு ரூ. 2.75 என்ற விலையில் வழங்கப்படுகிறது.

திரு. என் .ஸ்ள .வி. சித்தன். மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 280 லிட்டர் என்ற அளவு ஒரு ஓட்டலுக்கா அல்லது மொத்த ஓட்டல்களுக்கும் சேர்த்து சொல்லப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

ம ண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. மாண்புமிகு தலைவர் அவர்களே, 7 நிறுவனங்கள் தங்களுக்குத் தேவை என்று விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்த 7 நிறுவனங்களுக்கு காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளுக்கும் சேர்த்துத்தான் இந்த 280 லிட்டர்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் பால்வள நிறுவனத்திற்கு நேரடியாக இருக்கின்ற வகையில் தமிழகத்திலே பரவலாக பால் அரைக்கும் எந்திரங்களை லைசன்ஸ் பெறாமலேயே வைத்து, பால்வள நிறுவனத்திற்கு எதிராக வியாபாரம் நடத்தப்படுவது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படி உரிமம் இல்லாமல் பால் அரைக்கும் எந்திரங்களை வைத்து வியாபாரம் செய்யப்படுவது தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

உசிலை வட்டத்தில் மணற் காற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்.

*வினா எண் 86—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—